# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**7 வயதுப்பிரிவு**
**(01.01.2019 – 31.12.2019 வரையில் பிறந்தோர்)**

## நடுகல்

தாய்நாட்டுக்காகப் போரிட்டு வீரச்சாவடைந்த வீரருக்காக நாட்டப்படுவது நடுகல். இது தமிழர் வீரத்தின் சான்றாக விளங்குகிறது. போர் வீரரின் பெருமையை அழிந்துவிடாமல் காக்கும் தமிழரது உயரிய எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

வீரரின் பெயரையும் அவரது போர்த் திறனையும் நடுகல்லிலே பொறித்து அதனை வணங்குவது தமிழர் மரபு. அதனையே தமிழீழத்தில் தலைவர் மாமா மீளவும் உருவாக்கினார்.

தமிழீழ விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்தோர் ‘மாவீரர்’ என்று சிறப்பிக்கப்பட்டனர். நடுகல் நடப்படும் இடங்கள் புனிதமும் உணர்வும் மிக்கவை. அவை மாவீரர் துயிலும் இல்லங்களாகப் பேணப்பட்டன.

முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் நவம்பர் 27ஆம் நாள் வீரச்சாவடைந்தார். அந்நாளே அனைத்து மாவீரர்களையும் நினைவேந்தும் தமிழீழத் தேசிய மாவீரர் நாளாக அறிவிக்கப்பட்டது.

இன்று தமிழீழத்திலே மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனாலும், தமிழர் வாழ்கின்ற நாடுகள் எங்கும் மாவீரர் நாள் உணர்வோடு நினைவு கூரப்படுகிறது. எங்கள் தாயகம் மீட்கப்படும். அப்போது துயிலும் இல்லத் தாய்மடியில் நடுகற்கள் நிமிர்ந்து நிற்கும்.

நன்றி

வணக்கம்